பூந்தளிர் அமர் சித்திரக்கதை

No. 37

கடோத்கஜன் பிறப்பு

COMICS PDF TIMES

ஒரு பைகோ பிரசுரம்

மகாபாரதம்

AMAR CHITRA KATHA

11 KRISHNA
12 SHAKUNTALA
13 THE PANDAVA PRINCES
14 SAVITRI
15 RAMA
16 NALA DAMAYANTI
17 HARISCHANDRA
18 THE SONS OF RAMA
19 HANUMAN
20 MAHABHARATA
21 CHANAKYA
22 BUDDHA
23 SHIVAJI
24 RANA PRATAP
25 PRITHVIRAJ CHAOHAN
26 KARNA
27 KACHA
28 VIKRAMADITYA
29 SHIVA PARVATI
30 VASAVADATTA
31 SUDAMA
32 GURU GOBIND SINGH
33 HARSHA
34 BHEESHMA
35 ABHIMANYU
36 MIRABAI
37 ASHOKA
38 PRAHLAD
39 PANCHATANTRA I
40 TANAJI
41 CHHATRASAL
42 PARASHURAMA
43 BANDA BAHADUR
44 PADMINI
45 JATAKA TALES I
46 VALMIKI
47 GURU NANAK
48 TARABAI
49 RANJIT SINGH
50 RAM SHASTRI
51 RANI OF JHANSI
52 ULOOPI
53 BAJI RAO I
54 CHAND BIBI
55 KABIR
56 SHER SHAH
57 DRONA
58 SURYA
59 URVASHI
60 ADI SHANKARA
61 GHATOTKACHA
62 TULSIDAS
63 SUKANYA
64 DURGADAS
65 ANIRUDDHA
66 ZARATHUSHTRA
67 THE LORD OF LANKA
68 TUKARAM
69 AGASTYA
70 VASANTASENA
71 INDRA & SHACHI
72 DRAUPADI
73 SUBHADRA
74 AHILYABAI HOLKAR
75 TANSEN
76 SUNDARI
77 SUBHAS CHANDRA BOSE
78 SHRIDATTA
79 JATAKA TALES II
80 VISHWAMITRA
81 THE SYAMANTAKA GEM
82 MAHAVIRA
83 VIKRAMADITYA'S THRONE
84 BAPPA RAWAL
85 AYYAPPAN
86 ANANDA MATH
87 BIRBAL THE JUST
88 GANGA
89 GANESHA
90 CHAITANYA MAHAPRABHU
91 HITOPADESHA I
92 SAKSHI GOPAL
93 KANNAGI
94 NARSINH MEHTA
95 JASMA OF THE ODES
96 SHARAN KAUR
97 CHANDRAHASA
98 PUNDALIK & SAKHU
99 RAJ SINGH
100 PURUSHOTTAM DEV & PADMAVATI
101 VALI
102 NAGANANDA
103 MALAVIKA
104 RANI DURGAVATI
105 DASHARATHA
106 RANA SANGA
107 PRADYUMNA
108 VIDYASAGAR
109 TACHCHOLI OTHENAN
110 SULTANA RAZIA

Acquaint your children with their cultural heritage

111 SATI & SHIVA
112 KRISHNA & RUKMINI
113 RAJA BHOJA
114 GURU TEGH BAHADUR
115 PAREEKSHIT
116 KADAMBARI
117 DHRUVA & ASHTAVAKRA
118 KING KUSHA
119 RAJA RAJA CHOLA
120 DAYANANDA
121 VEER DHAVAL
122 ANCESTORS OF RAMA
123 EKANATH
124 SATWANT KAUR
125 UDAYANA
126 JATAKA TALES III
127 THE GITA
128 VEER HAMMIR
129 MALATI & MADHAVA
130 GARUDA
131 BIRBAL THE WISE
132 RANAK DEVI
133 MARYADA RAMA
134 BABUR
135 DEVI CHOUDHURANI
136 RABINDRANATH TAGORE
137 SOORDAS
138 PANCHATANTRA II
139 PRINCE HRITADHWAJA
140 HUMAYUN
141 PRABHAVATI
142 CHANDRA SHEKHAR AZAD
143 A BAG OF GOLD COINS
144 PURANDRA DASA
145 BHANUMATI
146 VIVEKANANDA
147 KRISHNA & JARASANDHA
148 NOOR JAHAN
149 ELEPHANTA
150 TALES OF NARADA
151 KRISHNADEVA RAYA
152 BIRBAL THE WITTY
153 MADHVACHARYA
154 CHANDRA GUPTA MAURYA
155 JNANESHWAR
156 BAGHA JATIN
157 MANONMANI
158 ANGULIMALA
159 THE TIGER AND THE WOODPECKER
160 TALES OF VISHNU
161 AMRAPALI
162 YAYATI
163 PANCHATANTRA III
164 TALES OF SHIVA
165 KING SHALIVAHANA
166 THE RANI OF KITTUR
167 KRISHNA & NARAKASURA
168 THE MAGIC GROVE
169 LACHIT BARPHUKAN
170 INDRA AND VRITRA
171 AMAR SINGH RATHOR
172 KRISHNA & THE FALSE VASUDEVA
173 KOCHUNNI
174 TALES OF YUDHISHTHIRA
175 HARI SINGH NALWA
176 TALES OF DURGA
177 KRISHNA AND SHISHUPALA
178 RAMAN OF TENALI
179 PAURAVA AND ALEXANDER
180 INDRA AND SHIBIRAJA
181 GURU HAR GOBIND
182 THE BATTLE FOR SRINAGAR
183 RANA KUMBHA
184 ARUNI AND UTTANKA
185 HITOPADESHA II
186 TIRUPPAN & KANAKADASA
187 TIPU SULTAN
188 DR. AMBEDKAR
189 THUGSEN
190 KANNAPPA
191 THE KING IN A PARROT'S BODY
192 RANADHIRA
193 KAPALA KUNDALA
194 GOPAL & THE COWHERD
195 JATAKA TALES IV
196 HOTHAL
197 THE RAINBOW PRINCE
198 TALES OF ARJUNA
199 CHANDRALALAT
200 AKBAR

Available at
PAI & CO.
Ernakulam, Calicut, Madras, Trivandrum
And all other Leading Book Sellers

MAHABHARATA 9

© IBH Publishers Pvt. Ltd. 1980. The Tamil Edition published by arrangement with IBH Publishers Pvt. Ltd., Mahalaxmi Chambers, 22, Bhulabhai Desai Road, Bombay-400 026.

Editor: Anant Pai

Art works: Dilip Kadam

Script: Kamala Chandrakant & T. M. P. Nedungadi



V. M. R. BOOK SHO
SOUTH CAR STREET
CHINNAMANUR-6265

குந்தியும் பாண்டவர்களும் தூங்கிய இடத்துக்கு அரு-
கிலேயுள்ள ஒரு மரத்தில் இடும்பன் என்ற மனித மாமிசம் உண்ணும் அரக்கன் வாழ்ந்து வந்தான்.
பசியோடிருந்த அவன் மனித வாசனையை நுகர்ந்தான். துள்ளி எழுந்த அவன் ஆவலோடு சுற்றுமுற்றும் ஆராய்ந்தான். பாண்டு புத்திரர்கள் மரத்தடியில் படுத்திருப்பதைக் கண்டான்.

COMICS PDF TIMES

சகோதரனின் கட்டளைப்படி, ராட்சசி-யான இடும்பி கிளம்பினள்.
தூங்கும் பாண்டு புத்திரர்களையும் அவர்கள் தாயையும் காவல் காத்துக் கொண்டிருக்கும் பீமனையும் கவனித்தாள்.
பீமனைக் கண்ட ராட்சசி அவன் மீது மையல் கொண்டு தனக்குள் கூறிக் கொண்டாள்.
வலுவான நீண்ட புஜங்கள், ஒளி வீசும் மேனி, பரந்த தோள்கள், அழகிய கழுத்து- இவர் என் கணவனா-கத் தகுந்தவர்.
கொன்றால், இவ்-வுடல் பசி தீர்க்கும் சிறிது நேர மகிழ்ச்சியே கிடைக்கும் இவர் வாழ்ந்தால் குறையா இன்பம் எனக்குண்டு.
என் சகோதரனின் கொடிய ஆணைக்குப் பணிய மாட்டேன். கணவன் மீது ஒரு பெண் காட்டும் அன்பு சகோதர பாசத்தை மீறியதாகும்.

உடனே அந்த ராட்சசி ஒரு அழகான மனிதப்பெண் உருக் கொண்டு ஆபரணங்கள் ஜ்வலிக்க —
.. சிரித்த முகத்துடன் பீமனை நோக்கி நடந்தாள்.
மாவீரனே, நீ யார்? இடும்பன் என்ற அரக்கன் வாழும் இக்கானகத்து-க்கு எங்கிருந்து வந்திருக்கிறாய்? என் சகோதரனான அந்த அரக்கன் உன்னைத் தன் உணவாக்கிக் கொள்ள என்னை அனுப்பியிருக்கிறான்.
உங்கள் தெய்வீக அழகில் மயங்கிய நான், உங்களை என் கணவராக்கிக் கொள்ளவே ஆசைப்படுகிறேன். கொல்ல விரும்பவில்லை.
காமனின் கணையால் நான் தாக்குண்டேன். உங்க-ளுக்குத் தெரியும், எதுமுறையோ அதன்படி செய்-யுங்கள்.

வல்லமை மிக்கவரே, என்னை உங்களுடையவளாக்கக் கொள்ளுங்கள், அந்த அரக்கனிடமிருந்து நான் உங்களைக் காப்பாற்றுகிறேன்.
விண்ணிலே என் விருப்பப்படி உலாவ முடியும். என்னால். உயர்ந்த மலைகளின் ரகசியக் குகைகளில் நாம் கணவன் மனைவியாக வாழலாம்.
அவளுக்கு பீமன் பதில் கூறினான்.
என் போன்ற ஒருவன் தூங்கும் தன் சோதரரையும் தாயையும் கை விடுவானா? தன் சிற்றின்பத்துக்காக அவர்களை ராட்சசனுக்கு உணவாக்குவானா?
இடும்பி கூறினாள்.
அவர்களை எழுப்புங்கள். உங்கள் எல்லோரையுமே அந்த ராட்சசனிடமிருந்து காப்பாற்றுகிறேன்.
பீமன் கூறினான்.
உன் சகோதரனுக்கு பயந்து நான் என் சகோதரரையும் தாயையும் எழுப்ப மாட்டேன்.

அழகியே! என் பலத்தின் முன் எந்த ராட்சதனும் தாங்க முடியாது. கந்தர்வ, யட்சர்களாலுமே என்னை வெல்ல முடியாது.
இங்கு இருப்பதோ போவதோ - உன் விருப்பம். உன் சகோதரனை அனுப்பினாலும் சரி எனக்கு எல்லாமே ஒன்றுதான்.
இதனிடையே சகோதரி திரும்பாததைக் கண்ட இடும்பன் மரத்திலிருந்து இறங்கினான்.
பாண்டவர்கள் இருக்கும் இடம் நோக்கி வந்தான்.
இடும்பி தன் சகோதரன் வருவதைக் கண்டு பயந்து பீமனிடம் கூறினாள்.
இதோ நரமாமிசம் உண்பவன் வருகிறான்.
நான் சொல்லும்படி செய்யுங்கள். சகோதரரையும் தாயையும் எழுப்புங்கள். உங்களைச் சுமந்து நான் ஆகாயத்தில் கிளம்புகிறேன்.

பீமன் சொன்னான்.
உன் பயத்தை விடு. இந்த ராட்சதன் எனக்கு வெறும் தூசி. ராட்சதக் கூட்டமே வந்தாலும் எனக்கு இணையாக முடியாது.
உன் கண் எதிரிலேயே இவனை இங்கு கொன்று போடுகிறேன் பார்.
யானையின் துதிக்கைப் போன்ற என் கரங்களைப் பார்.
இரும்புத்தூண் போன்ற இந்த என் தொடைகளைப் பார்.
வலுவான இந்த என் மார்பைப் பார்.
இந்திரனின் பலத்துக்கு நிகரான என் வல்லமையை இன்று நீ காணப் போகிறாய். என்னை சாதாரண மனிதனாக நினைக்காதே.

இடும்பி கூறினாள்.
வீரரே! நான் உம்மைக் குறைவாக மதிக்கவில்லை. நீங்கள் தேவரில் ஒருவர். ஆனால் மனிதர்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் ராட்சதர்களைப் பார்த்திருக்கிறேன்.
வெறி கொண்ட ராட்சதன், தன் சகோதரி மனித உருவில் அழகிய ஆடை அணிகளுடன் பீமனோடு பேசிக் கொண்டிருப்பதைக் கண்டு...
..கோபத்துடன் விழிகளை உருட்டி விழித்து கர்ஜித்தான்.
என் கோபத்தைக் கண்டு பயப்படாத அளவுக்கு சித்த சுவாதீனமிழந்தாயா நீ? சீ! மனிதனிடம் மையல் கொண்டு ராட்சச இனத்துக்குக் களங்கமேற்படுத்தி விட்டாய். உன்னையும், யாருக்காக என்னைத் துறந்தாயோ அவர்களையும் கொல்கிறேன்.


ரத்தம் ஏறிய விழிகளுடன், இடும்பன் பற்களை நற-
நறத்தபடி பீமனையும் அவளையும் கொல்ல ஓடி
வந்தான். பீமன் ராட்சதனிடம் கூறினான்.
கொடியவனே
நில்! என் முன்-
னால் ஒரு பெண்-
ணுக்குத் தீங்கு
இழைக்கக்
கூடாது.


பீமன் சிறிது பரிகாசத்துடன் தொடர்ந்தான்
என்னுடு போரிட வா.
பெண்ணைக்
கொல்லாதே. அவள்
யாரோவும் அல்ல.

உன் சகோதரி. அவளை
நீதான் இங்கு அனுப்பினாய்.
காமதேவனின் தூண்டு
தலால் அவள் என்னை
விரும்புகிறாள். அது
அவள் தவறல்ல.


முதலில் என்னைத் தாக்கு.
ஒரே அடியில் உன்னை யமனுலகு-
க்கு அனுப்பி, உன்னால் இக்
கானகத்தின் வழியே செல்வோரு-
க்கு ஏற்பட்டுள்ள பயத்தைப்
போக்குகிறேன்.


மதங் கொண்ட யானை
யின் காலடியில் நசுங்-
கும் தலைபோல உன்
தலையை நொறுக்கும்
வல்லமை எனக்குண்டு.
உயிரற்ற உன் உடலை
நரி, கழுகு ஓநாய்களுக்கு
விருந்தாக்குவேன்.


கொடியவனே! மத-
யானையை சிங்கம்
கொன்று இழுத்துச் செல்
வது போல உன்
உடலை நான் தரையில்
இழுத்துப் போவதை உன்
சகோதரி பார்க்கட்டும்.

இதைக் கேட்ட இடும்பன் கூறினான்.
இந்தத் தற்புகழ்ச்சியால் பயனில்லை. செயலில் காட்டு- தாமதிக்காதே. மகா-பலசாலி, வீரன் என்று உன்னைக் கரு-தும் நீ என்னை மோதிப்பார். உண்மை தெரியும்.
அதுவரை நான் மற்றவர்களைக் கொல்லவில்லை. அவர்கள் நிம்மதியாகத் தூங்கட்டும்.
ஆபாசவாயனை உன்னை முதலில் கொன்று உன் ரத்தத்தைக் குடித்த பிறகு மற்றவர்களைக் கொல்கிறேன்.
கடைசியாக எனக்கு எதிரியாகிப் போன என் சகோதரியைக் கொல்கிறேன்.

பிறகு ராட்சதன் வெறியோடு கைகளை உயர்த்தியபடி பீமனை நோக்கிப் பாய்ந்தான்.
பீமன் சிரித்தபடி அவன் விரித்த கரங்களைப் பற்றி...
இழுத்தான். ஒரு சிங்கம் சிறுபிராணியை இழுத்தால் எப்படி நிலை குலைந்து போகுமோ அப்படித் தவித்துத் தடுமாறிப் போனான் இடும்பன்.
பீமனால் இழுபட்ட ராட்சதன் வெகுண்டு வெறிக் கூச்சலிட்டான்.
யீ.யீ.ஹீ.யா
அவன் கூச்சலால் தன் சகோதரரின் தூக்கம் பாதிக்கப்படக்கூடாது என்று, வல்லவனை பீமன் ராட்சதனைக் இழுத்துக் கொண்டு அப்பால் சென்றான்.

அவர்கள் கோபம் கொண்ட மத யானைகளைப்போல் அடித்தும் குத்தியும் சண்டையிட்டனர்
பிறகு அவர்கள் பெரும் மரங்களைப் பிடுங்கியும் கொடிகளை இழுத்து வருவியும் போரிடலானார்கள்.


அந்தச் சத்தம் தூங்கும் பாண்டவர்களையும் தாயையும் விழிக்கச் செய்தது. தங்கள் முன் இடும்பி நிற்பதைக் கண்டார்கள். அவள் அழகில் வியந்த குந்தி கேட்டாள்.
யாரம்மா நீ? வனதேவதையா? அப்சரஸா? அழகியே, எங்கிரு-ந்து வருகிறாய்? உன்னை இங்கு வரச் செய்தது எது?

இடும்பி பதிலளித்துக் கூறினாள்.
.. வல்லமைமிக்க உங்கள் மகனைக் கண்டதும், மன்மதனின் கணையால் தாக்குண்டேன். மணந்தால் இவரையே கணவராக அடைவது என்று உறுதி கொண்டேன்.
நான் வராததால் எரிச்சலுற்ற ராட்சதன் உங்கள் புதல்வர்களைக் கொல்ல இங்கு வந்தான். உங்கள் வீரமகன் அவனை இழுத்துக் கொண்டு அப்பால் போயிருக்கிறார்.
அதோ பாருங்கள், கட்டிப்புரளும் அவர்களை; மனிதனும் - ராட்சதனும் பலத்தில் இணையாகப் போரிடுகிறார்கள்.


இதைக் கேட்டதும் யுதிஷ்டிரர், அர்ஜுனன், நகுல சகதேவர்கள் எழுந்தனர். ஒருவரை ஒருவர் வென்றுக் கொள்ளப் போரிடும் அவர்களைக் கண்டனர்.
காட்டுத் தீயின் புகை போலிருந்தது, அவர்கள் எழுப்பிய புழுதி. உடல்கள் புழுதியால் மூடி பர்வதங்களைப் போலக் காட்சியளித்தனர்.
பீமன் சிரமப்படுவதாக எண்ணிய அர்ஜுனன் சிரித்தபடி கூறினான்.
பயப்படாதே பீமா. உங்கள் போராட்டத்தை நாங்கள் அறியவில்லை. உனக்கு உதவ நானிருக்கிறேன். இந்த ராட்சதனை வீழ்த்துகிறேன். நகுல சகதேவர் அம்மாவுக்குக் காவலாக இருப்பார்கள்.

அதைக் கேட்ட பீமன் கூறினான்.
இப் போராட்டத்தை நீ வெறும் பார்வையாளனைப் போலக் கவனி. ஆர்வப்படாதே. என் பிடிக்குள் சிக்கிய ராட்சதன் உயிரோடு தப்ப முடியாது.
அர்ஜுனன் கூறினான்.
இன்னும் அவனை ஏன் உயிரோடு விட்டிருக்கிறாய்? அவனோடு போராடியது போதும். நாம் வெகு தொலைவு போக வேண்டும். தாமதிக்க முடியாது. சீக்கிரம் அவன் வாழ்வை முடி.
கிழக்கு திசையில் செம்மை படர ஆரம்பித்து விட்டது. ராட்சதர்களின் பலம் அந்தி வேளையில் அதிகமாகும். ஆகவே விரைந்து செயல்படு.
பிறகு வெகுண்ட பீமன் தன் பலம் எல்லாம் திரட்டி -பிரளயகாலத்தில், அவன் தந்தையான வாயுதேவனைப் போல செயல்பட்டு...





COMICS PDF TIMES

இதனால் எரிச்சலடைந்த பீமன்
ராட்சதனைச் சுழற்றி...
..இறக்கும்படி வீசினான். ராட்சதனின்
மரண ஓலத்தினால் கானகமே கிடுகிடுத்தது.
பிறகு வல்லமைமிக்க
பீமன், தன் வெறும்
கைகளினால், ராட்சத-
னின் உடலை வளைத்து
நடுவில் முறித்துத்
துண்டாக்கி வீசினான்.
இச்செயல் - வீரர்களான
அவன் சகோதரரை
மகிழச் செய்தது.
தன் மூத்த சகோதரனின் முரட்டுப் பலத்தில் மதிப்-
புடைய அர்ஜுனன் கூறினான்.
காட்டின்
அருகே ஒரு நகரம்
இருக்குமென்று நம்புகிறேன்.
துரியோதனன் தேடி வரு
வதற்குள் நாம் இங்கி-
ருந்து கிளம்புவோம்.

வீரர்கள் ஐவரும் தாயாருடன் கிளம்ப இடும்பி அவர்களைப் பின் தொடர்ந்தாள்.
இதைக் கண்ட பீமன்-
ராட்சதர்கள் பழி வாங்கும் மனப்பான்மையினர். சூனியம் செய்து பழி முடிப்பவர்கள்.
ஆகவே இடும்பி உன்னையும் உன் சகோதரன் போன இடத்துக்கு அனுப்புகிறேன்.
யுதிஷ்டிரன் கூறினார்.
பீமா, கோபத்தினால் ஒரு பெண்ணைக் கொல்லாதே. தர்மத்தைக் கடைப்பிடி.
நம்மைக் கொல்ல வந்த இடும்பனை நீ கொன்று விட்டாய்.
அந்த ராட்சதனின் சகோதரியான இவள். நீ கோபப்படும்படி நமக்கு என்ன கெடுதல் செய்து விட்டாள்?

இடும்பி குந்தியையும் புதல்வரரையும் வணங்கிக் கூறினாள்.
மாதரசியே, பெண்கள் காதல் நோயால் எப்படி வேதனைப்படுவர் என்பது தங்களுக்குத் தெரியும். அத்தகைய வேதனை பீமனால் எனக்கு ஏற்பட்டுள்ளது.
என் நண்பர்கள், என் இனம், பழக்கங்கள் எல்லாவற்றையும் துறந்து உங்கள் மகனை என் கணவனாக வரித்து விட்டேன்.
அந்த வீரனும் நீங்களும் என்னை ஏற்கா விடில் நான் வாழப் போவதில்லை.
உங்கள் மீது நான் கொண்டுள்ள பக்திக்காக. என்னை உங்கள் பணிப்பெண்ணாக வைத்துக் கொள்ளுங்கள். ஆனால் பரிவு கொண்டு உங்கள் மகனோடு என்னை இணைத்து என் கணவனாக்குங்கள். அவரோடு நான் விரும்பும் இடத்துக்குப் போக அனுமதியுங்கள்.

அவரை நான் மீண்டும் உங்களிடம் ஒப்படைப்பேன். நீங்கள் நினைக்கும்போது தோன்றி உங்கள் விருப்பப்படி செயல்படுவேன். என்னை நம்புங்கள்.
தடைகளை மீறி உங்களையெல்லாம் என் முதுகில் சுமந்து போகவேண்டிய இடத்துக்கு விரைவில் கொண்டு சேர்ப்பேன். கருணை கூர்ந்து என்னை ஏற்கும்படி பீமனிடம் கூறுங்கள்.
நேர்மையான பாதையில் செல்பவர்களுக்கு துன்பம் ஏற்படும்போது தற்காத்துக் கொள்ளும் வழியைத் தெரிந்து கொண்டிருக்க வேண்டும்.
வாழ்க்கை அழியா-திருக்கச் செய்வது நேர்மையே. அதன் பொருட்டுக் கவலைப் படாதிருப்பது கண்டனத்துக்-குரியதாகும்.

பிறகு யுதிஷ்டிரன் கூறினான்.
நீ கூறுவது மறுக்க முடியாதது தான். ஆனால் நீ உன் வார்த்தைப் படி நடக்க வேண்டும்.
பகல் போதில் பீமன், ஸ்நானம், பிரார்த்தனை முதலிய சடங்குகளை முடித்த உடன்...
.. நீ அவனுக்கு பணிவிடை செய்து அவனோடு சுகித்திருக் கலாம். ஆனால் தினம் இரவில் அவனை எங்களிடம் ஒப் படைத்து விட வேண்டும்
பீமன் இடும்பியிடம் கூறினான்.
உனக்கு ஒரு மகன் பிறக்கும் மட்டுமே தான் உன்னோடு இருப்பேன்.
அவள் கூறினாள்.
அப்படியே ஆகட்டும்.


..இடும்பி பீமனைத் தன் முதுகில் ஏற்றிக் கொண்டு மேலே கிளம்பி....
..ஆகாயத்தில் வேகமாகப் பறந்தாள்.
கடவுளர்கள் உலவும் மலைச்சரிவுகளில், பறவைகள் பாடி மகிழ்விக்கும் புல்வெளிகளில், பீமனுடன் குலாவி மகிழ்ந்தாள்.
தாமரைத் தடாகங்களில் மூழ்கி விளையாடி...
..கானகங்களில் பீமனுடன் கை கோர்த்தபடி உல்லாசமாகத் திரிந்தாள்.


இப்படி பீமனுடன் பல்வேறு பகுதிகளிலும் உலாவி, அவனை மகிழ்வித்து குறித்த காலத்தில் ஒரு ஆண் மகனைப் பெற்றுக் கொண்டாள் - பாண்டவர்களின் வாரிசாக. குழந்தை பிறந்த உடனேயே வாலிபனாக வளர்ந்தது.


வழ வழப்பான தண்ணீர்க் குடம் போலிருந்தது குழந்-தையின் தலை. ஆகவே தாய் அவனுக்கு 'கடோத்கஜன்' என்று பெயரிட்டாள்.
மானிடனையும் கடோத்கஜன், மாமன்னனை ராட்சதர்கள், பிசாசுகளை வெல்லும் பலசாலியாக விளங்கினான்.

வல்லமைமிக்க பீமனின் மகன் எல்லா ஆயுதங்களின் ரகசியங்களையுமறிந்த அதிசூரனாகி இருந்தான்.
பாண்டவர்களிடம் அன்பும் பக்தியும் கொண்டிருந்த கடோத்கஜனை, தங்களில் ஒருவனாகக் கருதி நேசித்தார்கள் பாண்டவர்.
பிறகு இடும்பி கூறினாள்.
என் கணவருடன் இருக்க வேண்டிய காலம் முடிந்து விட்டது.
குந்தியையும் பாண்டவர்களையும் வணங்கி....
..தன் வழியே போனாள்


பிறகு கடோத்கஜன் பாண்டவர்களிடம், 'நீங்கள் விரும்பும் போது நான் வருவேன்' என்று உறுதி யளித்து வணங்கி...
..வடதிசையில் பயணமானான்.
வெல்லமுடியாத வீரர்களான பாண்டவர், கானக வழியே பல மிருகங்களை வேட்டை யாடியபடி நடந்தார்கள்.
மரஉரியும், தோலாடையும் புனைந்து தலைமயிரை ஜடாமுடியாக்கிக் கொண்டிருந்தார்கள்.
வேதங்களையும் உபநிடதங்களையும் தியானித்தபடி தூய வழியில் நாட்களைக் கழித்தார்கள்..



COMICS PFF TIMES

என் குருதேவர் குந்திக்கு ஆறுதல் கூறி-
னார்.
உன் மகன் யுதிஷ்டிரன்,
பீமன், அர்ஜுனனின் வல்லமை
யின் உதவியோடு இவ்வுலகை
நேர்மையாக ஆளுவான்.
அஸ்வமேதம், ராஜ
சூயம் போன்ற மகத்தான
யாகங்களை செய்து வலு-
வும் வளமும் கொண்ட
அரசை அமைப்பான்.
உன் புதல்வர்களும்
மாத்ரியின் மைந்தர்-
களும் மகா வீரர்கள்.
புகழோடு மகிழ்வோடு
வாழ்வார்கள்.
தங்கள் மூதாதையரின்
ராஜ்யத்தை ஆண்டு,
நண்பர்களை, உற்றார்
உறவினர்களைப்
பேணிப் பாதுகாத்து
கோலாகலமாக
வாழ்வார்கள்.


ஒரு அந்தணரின் வீட்டில் அவர்கள் தங்குவதற்கு
ஏற்பாடு செய்த என் குரு, யுதிஷ்டிரனிடம் கூறினார்.
என்னை எதிர்பார்த்தபடி
இங்கு ஒரு மாதம் தங்குங்கள்.
இந்த சூழ்நிலைக்கேற்ப நீங்கள்
வாழ்வது உங்களுக்கு
மகிழ்ச்சியைத்
தரும்.
பிறகு பாண்டவர்கள் கரம் கூப்பி மகரிஷியை
வணங்கினார்கள்...
.. என் குரு விடை பெற்றுத்
திரும்பினார்.
இப்படியாக இடும்பனைக் கொன்று
கடோத்கசனை உருவாக்கிய
பாண்டவர்கள் ஏக சக்ரத்துக்கு
வந்து சேர்ந்தார்கள்.
வியாச மகா காவியமான மகாபாரதத்
தின் ஒன்பதாவது நாள் கதையை
வைசம்பாயனர் கூற
முடிவுற்றது.

செய்திகள் வாசிப்பது

பூந்தளிர் அமர் சித்திரக்கதை

★ புதிய தபால் தலைகள் வரிசையில் 18ம் நூற்றாண்டைச் சேர்ந்த புகழ்பெற்ற மேலைநாட்டு இசை மேதைகளான ஜோஹன் செபாஸ்டியன் பாச், ஜார்ஜ் பிரடரிக் ஹாண்டல் ஆகியோரின் உருவம் தாங்கிய விசேஷ ஸ்டாம்பு வெளியிடப்பட்டது.

★ முதலாவது உலக கன்னட மாநாடு, மைசூர் அரண்மனை மைதானத்தில் கோலாகலமாக நடைபெற்றது. இந்தியாவிலும் வெளி நாடுகளிலுமிருந்து வந்திருந்த 30,000க்கும் மேற்பட்ட மக்கள் இதில் கலந்து கொண்டனர். மூன்று நாட்கள் நடைபெற்ற இம்மகா நாட்டை ஞான பீட விருது பெற்ற கன்னடஎழுத்தாளர் டாக்டர் கோட சிவராம் கரந்த் தலைமை தாங்க, மற்றொரு ஞானபீட விருது பெற்ற கே. வி. புட்டப்பா துவக்கி வைத்தார். வரலாற்றுப் பாரம்பரியமும் கலாச்சாரச் செழுமையும் நிறைந்த தங்கள் மொழியின் மேம்பாட்டுக்காகப் பாடும்படி உலகெங்கிலும் வாழும் கன்னடர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி இம்மகாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றினார்.

★ 1985ம் ஆண்டின் முக்கிய சம்பவம் என்ன? உலகெங்கிலுமுள்ள பத்திரிகை ஆசிரியர்களிடையே அசோசியேட்டட் பிரஸ் நிறுவனம் ஒரு வாக்குப் பதிவு நடத்தியதில், பெரும்பான்மை வாக்குப் பெற்றிருப்பது அமெரிக்க ரஷ்ய நாடுகளின் தலைவர்களின் உச்ச சந்திப்பு. 25 ஆயிரம் பேரைப் பலி கொண்ட கொலம்பியா பூகம்பத்துக்கு இரண்டாவது இடமே கிடைத்துள்ளது.

★ பதினாறு கோடி ரூபாய் செலவில் கன்னியா குமரியை, சுற்றுலாத் தலமாக அபிவிருத்தி செய்ய தமிழக அரசு பெரிய தொருதிட்டம் தயாரித்துள்ளது. இத் திட்டம் 10 ஆண்டுகளில் அமல் நடத்தப்படுமாம்.

★ மண்டபம் அருகே தென் கடற்கரைப் பகுதியி லிருந்து 7 கி. மீட்டர் தொலைவில் நடுக்கடலில் ஒரு அழகிய தீவுள்ளது. இதற்கு முயல் தீவு என்றுபெயர்.

★ சென்ற ஆண்டு அமெரிக்கர்கள் குப்பையில் எறிந்த பொருள்களின் கணக்கைப்பாருங்கள். 9,900 கோடி பிளாஸ்டிக் கப்புகள் தட்டுகள் முதலியன, 1,600 கோடி குழந்தை லாங் கோட்டுகள், பிளேடுகளும் ரேசர்களும் 200 கோடி. பேனாக்கள் 160 கோடி. சிகரெட் லைட்டர்கள் 34.8 கோடி. போதுமா?

EDITED, PRINTED AND PUBLISHED BY DINESH V. PAI FOR POOMPATTA PUBLICATIONS
PRINTED AT PAICO PRINTING PRESS, PAICO OFFSET PRINTERS AND
POOMPATTA PUBLICATIONS—PRINTING DIVISION, COCHIN

அடுத்த

பூந்தளிர் அமர்
சித்திரக்கதை

ஏப்.25ல் வெளி வருகிறது!

கருடன்

Regd. No: R N 36195/84
1986 March 10
Poontalir
AMAR CHITRA KATHA
TN/MS (c) 744
Price : Rs. 1.50

உங்கள் குழந்தைகளின்
மனவளர்ச்சிக்கும்
அறிவு முதிர்ச்சிக்கும்
எந்த மருந்தும் தரவேண்டாம்

பூந்தளிர்

புதுமையான விருந்தே போதும்
ஒவ்வொரு மாதமும் 1—16 தேதிகளில்
உங்கள் செல்வங்களைக் குதூகலப்படுத்த
வருகின்றது
விலை ரூ. 2 தான்
ஆண்டு சந்த